

வெளியீடு: அனைத்துலகத் தொடர்பகம் - தமிழீழ விடுதலைப் புலிகள்

# கலையழகன் என்னும் காவிய நாயகன்





# லெப். கேணல் கலையழகன்

அனைத்துலகத் தொடர்பகத் துணைப் பொறுப்பாளர்

(சிவபாதசுந்தரம் ஞானசீலன் – யாழ். மாவட்டம்)





Liberation Tigers Of TAMIL EELAM

# அனைத்துலகத் தொடர்பகம்
# தமிழீழ விடுதலைப் புலிகள்


தமிழீழம்

## வீரவணக்கம்

### லெப். கேணல் கலையழகன்

அனைத்துலகத் தொடர்பகத் துணைப்பொறுப்பாளர்
(சிவபாதசுந்தரம் ஞானசீலன், யாழ். மாவட்டம்)

நல்ல கொள்கைப் பிடிப்பும் அறிவொழுக்கமும் நிறையப்பெற்ற விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்பகப் போராளி லெப். கேணல் கலையழகன் ஏப்ரல் 18, 2007ஆம் நாள் மாவீரனாகிவிட்டான். யாரங்கு நம்துயர் தாங்குவார், நம் சுமை நாம் தாங்குவோம் மனமே. பண்புடைமை கலையழகனின் உயர்ந்த சிறப்பாக இருந்தது. பிறர்மேல் காட்டும் அன்பு, மேன்மையான பேச்சு, இனிய சொற்கள், பிறருக்கு உதவும் இயல்பு, தாழ்ந்தோரைத் தாங்கும் குணம், நம்முடன் நன்றி உணர்த்தும் பாங்கு என்பன அவனிடம் குடியிருந்தன. மற்றவர் மனதறிந்து மதிப்பளிக்கும் கலையழகனின் சிறப்பியல்பை எளிதில் யாராலும் மறக்க இயலாது.



இளவயதில் புலி உறுப்பினனாக இணைந்த கலையழகன் என்ற இயக்கப் பெயர் பூண்ட எம்மவன் சிறந்த களமுனைப் போராளியாக விளங்கினான். கடமையுணர்வும், தேசப்பற்றும், இயக்க விசுவாசமும் அவனை எஃகு போல் நிமிர்ந்து நிற்கச் செய்தன. களம்பல கண்டவன் கல்வியிலும் சிறந்து விளங்கினான். ஆயுதத்தை மாத்திரம் நம்பியிராமல்




அனைத்துத் துறையிலும் நாம் உயர வேண்டும் என்ற தேசியத் தலைவரின் எதிர்பார்ப்புக்கு அமைவாக நாம் போராளிகளின் கல்வி வளர்ச்சியில் கவனமெடுத்தோம். வீரத்திலும், கல்வி ஞானத்திலும், தொழில்நுட்ப அறிவிலும், நிர்வாகத்திறத்திலும் மேன்மை கண்ட போராளிகளில் கலையழகனும் ஒருவன்.

அனைத்துலகத் தொடர்பகம் கடந்த பதினைந்து வருடத்திற்கு மேலாக போராளிகளுக்கான விசேட கல்விப் பணியை மேற்கொள்கின்றது. இயல்பான புத்திக்கூர்மையாலும் நாம் வழங்கிய கல்விப் பயனாலும் கலையழகன் தரமான மாணவனாக உயர்ந்தான். உள்ளக மற்றும் அனைத்துலக மட்ட வெளித்தள நிர்வாகத்திலும் கலையழகன் பயிற்சி பெற்றான். புலிகளின் ஊடகம், துணை அமைப்புக்கள், கட்டுமானத்துறை சார்ந்த செயற்பாடுகளில் சுயமாக இயங்கும் வலுவும் துணிச்சலும் பெற்றான். எமது நம்பிக்கை நட்சத்திரமாக நாம் கலைழக னைக் கணிப்பிட்டோம். அவனுடைய வீரச்சாவு எம்மைத் துன்புறுத்துவது உண்மையே எனினும் நாம் விழமாட்டோம், எமது இலட்சியப் போர் தொடரும்.

எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலும் இலட்சிய உறுதியிலும் இருந்து பிறக்கின்றது. ஒரு போராளியின் உயிர்ப்பெறு மதியை நாம் நன்கறிவோம். எமது இன விடியலுக்கான விடுதலைப் போரில் ஆகுதியான அனைத்து மாவீரர்களையும் ஒரு கணம் சிரம் தாழ்த்தி வணங்குகி றோம். எது வரினும் எமது போராட்டம் ஓயாது. எமது மாவீரர்களுக்கு நாம் செய்யும் கைமாறை போராட்டத்தை முன்னெடுப்பது மூலம் செலுத்துகிறோம்.

எமது மண்ணில் உலகறியாத தியாகங்களும் அர்ப்பணிப்புக்களும் நாளாந் தம் நடக்கின்றன. வீரம் செறிந்த எமது போராட்ட வரலாறு தமிழீழத்தை வென்றெடுக்கும். ஈடு செய்ய இயலாத லெப். கேணல் கலையழகனின் இழப்பை பின்வரும் இரங்கல் வரிகளால் நிறைவு செய்கின்றோம். எந்த வீரன் யாருக்காகப் போரிட்டானோ அந்தப் படைத்தலைவன் கண் கலங்கச் சாகின்ற பெருமை அந்த வீரனுக்குக்கிடைக்குமாயின் அந்தச் சாவு தேடிப் பெறும் சிறப்பு உடையது. லெப். கேணல் கலையழகனுக்கு எமது வீரவணக்கங்கள்.




புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# பண்பின் உறைவிடம்
# லெப். கேணல் கலையழகன்

கலையழகன் என நினைக்கும் போது, என்றும் மாறாத புன்னகை பூத்த அந்தப்பாலக முகமே எல்லோருக்கும் நினைவிற்கு வரும்.. கள்ளம் கபடமற்ற சிரிப்பும், எல்லோருடனும் அன்பாக, பண்பாக பழகும் தன்மையும், அனைவரையும் உபசரிக்கும் இயல்பும் அவனது இலட்சணங்கள். ஆனால் அவனுக்குள் இருந்த அற்புதமான திறமையும், ஆழமான ஆளுமையும், பன்முகத்தன்மையும் பலருக்குத் தெரியாது. குழந்தைத்தனமான முகத்திற்கு சொந்தக்காரன் பல்வேறு பொறுப்புக்களை தோளில் சுமந்து திரிந்த ஒரு அற்புதமான போராளி என்பது சிலருக்கும் மட்டும் தெரியும்.

ஆரம்பப் பயிற்சியை முடித்துக்கொண்ட கலையழகன், 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தேசியத்தலைவர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கேணல் கிட்டு அரசறிவியல் கல்லூரி மாணவனாக இணைத்துக்கொள்ளப்பட்டான். தலைவர் அவர்களின் எண்ணத்திற்கு ஏற்ப அரசறிவியலும், படையப்பயிற்சியும் இக்கல்லூரி மாணவர்களிற்கு மாறிமாறி வழங்கப்பட்டது. அக்கல்லூரியின் முதன்மை மாணவர்களில் ஒருவனாக மாவீரன் கலையழகன் திகழ்ந்தான். பேச்சாற்றல், நுட்பமாகப் பதில் கொடுக்கும் தன்மையினை கல்லூரியில் அவன் வளர்த்துகொண்டான். அங்கு அவனது ஒழுக்கம், கட்டுப்பாடு, மற்றவர்களோடு பழகும் தன்மை, எல்லோருக்கும் உதவும் பண்பு, நேர்மை என்பன அவனை தூய்மையான போராளியாக வெளிச்சம் போட்டுக்காட்டியது.




நான்கு வருடங்களிற்கு மேலாக அரசறிவியல் கற்ற கலையழகன் தேசியத்தலைவர் அவர்களது கருத்துரைகளினாலும், 'தேசத்தின்குரல்' அன்ரன் பாலசிங்கம் அவர்களின் தொடர் வகுப்புக்களினாலும் முழுமையான போராளியாகப் புடம் போடப்பட்டான். இந்தக்காலப்பகுதியில் கொமாண்





டோப் பயிற்சியிலிருந்து கனரகப்பீரங்கிப் பயிற்சி வரைக்குமான பல்வேறு வகையான படையப்பயிற்சிகளை அவன் பெற்றான். 1995-ஆம் ஆண்டு மாதகலில் ஆரம்பித்த அவனது போர் நடவடிக்கைகள் 'ரிவிரச', 'சத்ஜெய', 'ஜெயசிக்குறு', 'ஓயாத அலைகள்-03', 'ஆனையிறவுச்சமர்' என நீண்டது. அண்மைய முகமாலை தாக்குதல் களத்திலும் அவன் பங்குபற்றியிருந்தான். இக்கல்லூரியின் முதலாவது அணி மாணவர்களின் பட்டப்படிப்பு நிறைவடைந்த போது, மிகச்சிறந்த மாணவர்கள் சிலரில் ஒருவனாக கலையழகன் தெரிவு செய்யப்பட்டு தலைவர் அவர்களினால் சிறப்புப் பரிசும் 'திறவோர்' எனும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டான். அரசியல் அறிவும், படைய அறிவும் ஒருங்கே இணைந்து தலைவர் அவர்கள் எதிர்பார்த்த பல்துறைசார் போராளியாக அவன் இந்தக் காலகட்டத்தில் வளர்ந்திருந்தான்.


கல்லூரிக் காலங்களில் பகுதி நேரமாக கலையழகன் தொலைத்தொடர்பாளனாக செயற்பட்டான். பின்பு சிறிது காலம் மொழிபெயர்ப்பு அறிவினை பெறுவதற்கான கல்வியையும், பாதுகாப்பு பயிற்சியையும் பெற்ற கலையழகனுக்கு தேசியத்தலைவர் அவர்களைப் பற்றிய வரலாற்றுப்பதிவுகளை ஆவணமாக்கும் பணியில் ஈடுபடும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவ்வரிய சந்தர்ப்பத்தை தனது வாழ்நாளில் தனக்கு கிடைத்த பெரும் பேறாகவே அவன் கருதியிருந்தான். கால ஓட்டத்தில் அவனுக்கு வேலைச்சுமை அதிகரித்த போதும் தலைவர் அவர்களின் வரலாற்றை ஆவணமாக்கும் பணியினை தானே செய்யவேண்டும் என்ற ஆர்வமும் துடிப்பும் அவனுக்கிருந்தது. தலைவர் அவர்களது ஆரம்ப கால சம்பவங்களை தேடி எடுத்து தொகுப்பதிலும், தலைவர் அவர்களின் ஆரம்பகாலத் தோழர்களிடமும், ஆதரவாளர்களிடமும் தகவல்களைத் திரட்டி



அதனைச் சரிபார்த்து ஆவணமாக்குவதில் அவன் அதிக ஆர்வம் செலுத்தியிருந்தான். வேறு சில தேசப்பற்றாளர்களுடன் சேர்ந்து கலையழகனின் கடும் உழைப்பின் பயனாகவே "Leader for all season" என்ற தலைவர் அவர்களைப்பற்றிய புகைப்பட ஆவணநூலும், 'விடுதலைப் பேரொளி' என்ற தலைவர் அவர்களைப்பற்றிய தொகுப்பு நூலும் வெளிவந்தன.

செஞ்சோலை, காந்தரூபன் சிறார்களுக்கான எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைவதற்காக, அவர்களிற்கான அழகான, அமைதியான இருப்பிடங்களை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்ற தலைவர் அவர்களின் பெருவிருப்பத்தினை நிறைவேற்றும் பொறுப்பு கலையழகனிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப்பணியை விரும்பி ஏற்றுக்கொண்ட கலையழகன் அதற்காக கடுமையாக உழைத்தான். புலம்பெயர்ந்த மக்கள், அமைப்புக்கள், கோவில்கள் மத்தியில் இதற்கான நிதி வளங்களை திரட்டுவதற்காக கடும் பிரயத்தனமெடுத்தான். ஏராளமான பேரை அவன் சந்தித்தான், கதைத்தான், திட்டங்களை வழங்கினான். இறுதியில் அவன் இந்தப்பணியில் முழுமையாக வெற்றியடைந்திருந்தான். செஞ்சோலை காந்தரூபன் சிறார்களுக்கான இருப்பிடங்கள் அமைக்கப்பட்டு தலைவர் அவர்களால் அவை திறந்து வைக்கப்பட்டது அவனுக்குப் பெரும் மனமகிழ்வையும் திருப்தியையும் தந்திருந்தது. அவனது ஆன்மா அன்று நிறைவடைந்திருந்தது. இதே போலவே நவம் அறிவுக்கூட போராளிகளிற்கான அமைவிடத்திற்கும் கலையழகனின் பங்கு கணிசமானதாக இருந்தது.

எமது தேசத்திற்கான வெளிநாட்டுத் தொடர்புகளை, அனைத்துலக பணிகளை செய்வதற்கான தயார்ப்படுத்தலுக்காக கலையழகன் பல்வேறு நாடுகளிற்கு அனுப்பப்பட்டான். வெளிநாட்டுப் பயணமானது அவன் கல்லூரியில் கற்ற பல விடயங்களை நேரில் பார்த்து அறியக்கூடியதாக இருந்தது. புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களின் தாயகப்பற்று, விடுதலையுணர்வு, வாழ்க்கைநிலை என்பவற்றை அவன் அறிந்துகொண்டான். எமது பொறுப்பாளர்கள், செயற்பாட்டாளர்களின் கடின உழைப்புப் பற்றியும், எதிர்கொள்கின்ற பிரச்சினை குறித்தும் இங்கு சகதோழர்களிற்கு எடுத்துரைத்தான். அதேநேரம் தேசியத்தலைவரின் விடுதலைப்போராட்டம் குறித்த தெளிவான கருத்துக்களை அவன் செல்லுமிடமெல்லாம் முன்வைத்தான். நட்புரீதியாக நிறையப் பேருடன்






உறவாடி தொடர்புகளைப் பேணிவந்தான். புலம்பெயர்ந்த எமது உறவுகளின் தாயகம் தொடர்பான பிரச்சினைகளை அந்த மக்களின் நிலையில் நின்று பார்க்க வேண்டுமென்று வலியுறுத்தியவன். குறிப்பாக கனடாவில் வாழும் தமிழர்களிற்கான தாயகப்பணிகளை ஒருங்கிணைப்பதில் அவன் கடுமையாக உழைத்தான். புலம்பெயர் தமிழர்களின் பலத்தை, வளத்தை ஒருங்கிணைப்பதில் அவன் ஆற்றிய பணி அளப்பரியது. அவை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை.

கடந்த வருட நடுப்பகுதியில் கலையழகன் அனைத்துலகத் தொடர்பக துணைப்பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். இதற்கு இவனது பண்பும், ஆளுமையும், விடையங்களை இலகுவாகக் கையாளும் ஆற்றலும் காரணமாக இருந்தன. சக போராளித் தோழர்களை மதித்து, அவர்களோடு மனம் திறந்து பழகி, அனுசரித்து, அவர்களது தேவைகளை விளங்கி பூர்த்தி செய்யும் பக்குவம் அவனுக்கிருந்தது. போராளிகளை வளர்க்க வேண்டும், வேலைகளுக்குள்ளால் உள்வாங்க வேண்டும், நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டுமென்று அவன் விரும்பிச் செயற்பட்டான். அவனை விட வயதில் கூடியவர்களும், அனுபவசாலிகளும் இருக்குமிடத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தன்மை அவனிடமிருந்தது. அந்தக் கவர்ச்சி மிக்க ஆளுமை எல்லோரையும் அவன் பால் ஈர்த்தது. குறுகிய காலத்தில் அவன் மிக வேகமாக வளர்ந்தான். அவனது ஆற்றல், ஆளுமையின் வீச்சு, முதிர்ச்சியடைந்த தன்மை ஒரு பெரிய பொறுப்பை தனியே செய்யக்கூடிய நிலையினை அவன் அடைந்திருந்தான். அவன் நல்லவனாக மட்டுமல்லாமல் வல்லவனாகவும் திகழ்ந்தான் என்பது தான் உண்மை.


இவ்வாறான நேரத்தில் தான் 18.04.2007 அன்று எதிர்பாராத வெடிவிபத்தில் கலையழகன் வீரச்சாவு என்ற செய்தி வந்தவுடன் நாம் எல்லோரும் துடிதுடித்துப் பதறிப்போனோம். ஆழிப் பேரலை வந்து தாக்கியது மாதிரியான உணர்வு, பூமியதிர்ந்து நிலம் பிளந்து போன மாதிரியான நிலை, இதயத்தை யாரோ சம்மட்டியால் அடித்த அதிர்வு. வார்த்தைகளில் வடிக்க முடியாத துயரமும் வலியும். வேதனைச்சகதியில் சிக்கித் தவிக்கின்ற சோகம். ஏன் இவ்வளவு வேகமாக எமை விட்டுப்பிரிந்தான் என்று மனதில் ஆழமான வலியுடன்





எழும்பும் வினா. கலையின் இழப்பின் பெறுமதி, இழப்பின் இதயவலி, அதன் ஒட்டுமொத்தப் பரிமாணம் எனக்கே முழுமையாகத் தெரிந்திருந்தது. என்னையே முழுமையாகத் தாக்கியிருந்தது.

அவன் அழகானவன், பண்பானவன், பழகுவதற்கு இனிமையானவன், கள்ளம்கபடமற்ற வெள்ளையுள்ளம் படைத்தவன். ஆளுமையெடுத்து செயற்கரிய பணிகளைச் செய்தவன். முதல் நாள் உயிரோடு வலம் வந்தவனை மறுநாள் விதைகுழியில் விதைத்துவிட்டு வந்தோம். இது எவ்வளவு துயரமாக, கொடுமையாக இருந்தது. ஆனாலும் எவ்வளவு இழப்பு வரினும், இடர் வரினும் உறுதி தளரோம். லெப்ரினட் கேணல் கலையழகனது தலைவர் மீதான பற்றும் பாசமும், விடுதலைவேட்கையும், தேசிய உணர்வும் கொண்ட எண்ணங்களை நெஞ்சினில் சுமந்து அவனது இலட்சியக் கனவை நனவாக்குவோம் என அவனது விதைகுழி மீது சத்தியம் செய்கின்றோம்.



புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

- வீ. மணிவண்ணன்




# லெப். கேணல் கலையழகன் ஒரு பல்கலையாளன்

சிவபாதசுந்தரம் ஞானசீலனாக பதினேழு ஆண்டுகள் காத்திருந்து, கலையழகனாகிப் பதினான்கு ஆண்டுகளாகத் தேசவிடுதலை வரலாற்றில் இவன் எழுதிச்சென்ற சில பக்கங்களைப் புரட்டிப் பார்ப்பதற்கு நாம் இன்னும் சிறிது காலம் பொறுத்திருக்கவேண்டும். ஏனெனில், நமது ஈழத்தின் விடியலுக்காக இம்மாவீரன் களத்தில் இயங்கிய தளங்களும், புலத்தில் இயக்கிய வகைகளும் அத்தகையன.

யாழ். மாவட்டத்தின் வயலும் வனப்பும்மிக்க கிராமமொன்றில், ஆசைக்கொரு அக்காவுடனும் பாசமிகு மூன்று அண்ணன்களுடனும் கடைக்குட்டியாக வளர்ந்து, 1993-இல் தன்னைத் தாயகமீட்புப் போரில் இணைத்துக்கொண்ட எங்கள் மாவீரன் லெப். கேணல் கலையழகன்.

சரத்பாபு-07 பயிற்சிப் பாசறையில் தன் போராட்ட வரலாற்றுக்கு அடித்தளமிட்டு, பின்னர் கேணல் கிட்டு அரசறிவியற் கல்லூரியில் அரசியல், இராஜதந்திரக் கற்கையில் ஈடுபட்டுவந்த காலத்தில் சூரியக்கதிர்-01, சத்ஜெய-03, ஜெயசிக்குறுய், ஓயாதஅலைகள்-03 எனத் தாயகத்தில் நிகழ்ந்த பல சமர்க்களங்களில், தன் தடம் பதித்த எங்கள் மாவீரன் லெப். கேணல் கலையழகன்.


- சாதுரியம் கலந்த விகடக்கதைகளால் எல்லோரையும் சிந்தித்துச் சிரிக்க வைக்கும் கலை தெரிந்தவன்;
- வெளிப்பார்வைக்குக் கல்லெனத்தெரியினும் உள்ளே என்றும் வற்றாத ஈரமாய் பாசமும் நேசமும் காட்டிப் பழகும் கலை அறிந்தவன்;
- விவாதமேடைகளிலும் நாளாந்த உரையாடற் பொழுதுகளிலும், நறுக்குத் தெறித்தாற்போல பொருள் பொதிந்த வாதங்களை மணிக்குரலில் முன்வைக்கும் கலை வித்தகன்;
- கடினப் பயிற்சியென வருகையில், எழுகின்ற தடைகளைத் திறனுடன் சமாளித்து, சளைக்காது சிறப்புறப்



பயிலும் கலை மிகுந்தவன்;

- நெருக்கடி மிகுந்த, பல சிக்கல் முடிச்சுக்களைக் கொண்ட புலக்களத்தை, அமைதிக்குள்ளே ஆளுமை புகுத்தி வழிப்படுத்தும் கலை வல்லுநன்;
- கடினங்களும் இயங்குதடைகளும் செல்வழியைத் திசைதிருப்பவோ செயற்படுசக்தியை அசைக்கவோ இடமளித்துவிடாது இயங்கும் கலை உடையவன்;
- நட்புக்கும் நாளாந்தக்கடமைக்கும், தேசப்பணிக்கும் உறவுக்குமிடையே அளவான இடைவெளி பேணி இட்டபணியைத் திறனுடன் முடிக்கும் கலை ஆளன்;
- தன்னாற்றலுக்குச் சிறிதும் பொருத்தமேயற்ற எச்சிறுபணியெனினும், மறுத்துரை பேசிடாது முழுமூச்சுடன் முனைந்து முடித்திடும் கலை உணர்ந்தவன்;
- பல்லாயிரம் பணிச்சுமைகளுக்குள்ளே ஓய்வின்றிச்சுழன்று உழைத்த பொழுதிலும் புலச்செயற்பாட்டாளர்களுடன் கிரமமான தொடர்பினைப் பேணும் கலை வித்தகன்;
- பளீரென வெளிக்கும் முகச்சிரிப்புடன் அனைவரையும் அரவணைத்து, முரண்களைந்து, அவரவர் மனமறிந்து இனிதாய்ப் பேசும் கலை கொண்டவன்;
- இழப்புக்களையும் வேதனைகளையும் அலட்சியப்படுத்தி, ஆசைகளையும் தேவைகளையும் தூரவிரட்டி இயன்றவரை தேசப்பணிக்கெனவே வாழும் கலை ஆற்றலன்;

இவற்றின் காரணமாகவேதான் இவன் எல்லோராலும் விரும்பப் பட்டிருந்தான். இவற்றின் காரணமாகவேதான் இவன் நண்பர் களை அதிகம் ஈர்த்திருந்தான். இவற்றின் காரணமாகவேதான் இவன் சிறந்த பொறுப்பாளனாய் மிளிர்ந்திருந்தான். இவற்றின் காரணமாகவேதான் இவன் தலைவனையும் கவர்ந்திருந்தான்.



- கேணல் கிட்டு அரசறிவியற் கல்லூரித் தோழர்கள் -




# வீரவணக்கம்

## லெப். கேணல் கலையழகன்

அனைத்துலகத் தொடர்பகத் துணைப்பொறுப்பாளர்
(சிவபாதசுந்தரம் ஞானசீலன்)

செவிப்பறையில் ஊசியாய் குத்திய அந்தச்செய்தி
எங்கள் இதயங்களில் ஈட்டியாய் ஏறியது
செவிப்பறைக்கும் இதயத்திற்குமான இடைவெளியில்
ஏன் இப்படி ஒரு மாற்றம்
கலையழகா!
எமக்கும் உனக்கும் உள்ள உறவா - அல்லது
எங்கள் மண்ணிற்கும் உனக்கும் உள்ள உறவா
எங்கள் இதயங்களில் ஆறாத ரணமாய் நீ...
அலையலையாய் அலைந்த தமிழர் உறைந்த இடமெல்லாம்
ஆர்நான்கு மாதம் முன் அளவளாவிச்சென்றாயே
அண்ணனின் சேனையில் அனைத்துலக
துணைப்பொறுப்பாய்....
அமைதியும் எழிமையுமான அந்த தோற்றத்தில்
எத்தனை ஆழுமைகள் நீ கொண்டாய்
அளப்பரிய சாதனைகள் நீ புரிந்தாய்
கலையழகா!
நீ சுமந்த கனவுகளை நினைவிற்கொண்டு
நிச்சயம் ஈழம் நோக்கி நாம் நடப்போம்.



வெளியீட்டுப் பிரிவு
அனைத்துலகத் தொடர்பகம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பற்றுக்கும் பாசத்திற்கும் உரிய லெப். கேணல் கலையழகன் தனது இளம் அகவையில் முற்றிலும் எதிர்பாராத முறையில் அவர் வாழ்வு முற்றுப்பெற்றது எமது இதயத்தைப் பிழிந்து எடுக்கிறது.

மிகமிக நெருக்கடியான காலகட்டத்தில் வாழும் எமக்கு ஒவ்வொரு விடுதலைப் போராளியின் உயிரும் விலை மதிக்கமுடியாதது. எனவேதான் என்றும் துடிப்போடு களத்தில் குதிக்கும் கலையழகனின் இழப்பு எம்மை மீறி கண்களை கலங்கச் செய்கிறது.

கலையழனுக்காக கண்ணீர் விடுகின்ற நாம் அவரின் வீரத்திற்கு தலை தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறோம்.

மா. க. ஈழவேந்தன்
நாடாளுமன்ற உறுப்பினர்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(தென்னாபிரிக்காவிலிருந்து)





# தமிழீழ விடுதலைப் புலிகள்

யேர்மனிக் கிளை

19-04-2007


## உன்னத இலட்சியத்தை உருக்காய் வடித்தவன் எம் கலையழகன்

கலையாத உறுதி திடமான மனதுடைய
கலையழகா! நெஞ்சம் கனக்கிறதே!
நிலையிலா வாழ்வில் நிலையாக வேர்பதித்த - உன்
வீரமரண செய்தி கேட்டு (கலையாத...)

விழி சிந்தும் கண்ணீர்த் துளிகள்
சன்னமாகி நிமிர்கிறதே தோழா - நீ
வழிகாட்ட உணர்வாய் வருவாய்
எதிரியின் களம் பொசுங்கும்

அனைத்துலத் துணைப் பொறுப்பாய்
வழிகாட்டி நின்றாய்
ஆணையிடும் தலைவரின் விழிக் கதிரின்
வீச்சாகி களம் புகுந்தாய் - நீ

களமாடி தடம்பதித்த பூமியெங்கும்
விடியலின் பாதை பிறக்கிறதே
வளமான தமிழீழ வரலாற்றின் சுவடியிலே
கலையழகா நீ வீற்றிருப்பாய்




நம்பிக்கையூட்டி செயற்படுத்தி
எம்மை வழிகாட்டிய தோழனே - உன்
நம்பிக்கைத் தீயின் சக்தி வீச்சில்
விடியல் பிறப்பு திண்ணம்

பல்வகை கனரக ஆயுதங்களால் களமாடிய வீரன்
நிலமதை மிதித்திட்ட தீயோரை வதைத்திட்ட மாவீரன்
கேணல் கிட்டு அரசறிவியற் கல்லூரியின் அரசியல்
விஞ்ஞான அறிஞன்
கூனல் கொண்ட தமிழர் மனதை நிமிர்த்தி எடுத்த வீரன்

புலம் பெயர் மண்ணின் தமிழீழத் தமிழரை
நெறிப் படுத்திய வித்தகனே - தாய்
நிலம் மீட்க அன்பை வார்த்து
மனதை வென்ற அன்புருவே

உந்தன் இலட்சியம் உருக்காய் மாறும்
உலகில் ஈழம் மலரும் - எம்
உன்னத வேள்வியில் ஆகுதி ஆனால்
மா வீரனாகி வாழ்வாய்.

தமிழீழ விடுதலைப் புலிகள்
யேர்மனிக் கிளை





# தமிழீழ விடுதலைப் புலிகள்

இத்தாலிக் கிளை

பலெர்மோ
இத்தாலி.


எம் இனிய தோழனே உன்னதப் போராளியே தலைவன் விழி அசைவில் தேச விடுதலைக்காய் நடைபயின்ற கலையழகே!

கலை என்று எம் அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்ட எம் இனிய வீரனே நாம் இன்று தாயக விடுதலைப் பயணத்தில் விடுதலைக்கு உரமாக்கி விதைத்து நிற்கின்றோம்.

ஓ! வீரனே தொப்புள் கொடி உறவுபோல் களத் திற்கும் புலத்திற்கும் உணர்வுப்பாலமாய் அனைத்து லகத் தொடர்பகத்தின் துணைப் பொறுப்பாளனாய் எம்மோடு உறவாடிய நாட்கள் என்றுமே நினைவழியா நாட்களாகும்.

நீங்காத உம் நினைவுகள் தாயகம் விடியும் வரை எம்முடன் தொடருமென்றே நாம்

நினைத்திருந்தோம். காற்றலையில் வந்த செய்தி தாயகத்தையும் தாண்டி உணர்வால் தேசத்தை நேசித்து நிற்கின்ற ஈழத்தமிழ் நெஞ்சங்களில் பேரிடி யாய் விழுந்தது.



லெப். கேணல் கலையழகன்

நேற்று வரை ஆயிரம் கனவுகளை தேச விடுதலைக்காய் நீ சுமந்து சென்றிருப்பாய். அதில் உன் புலத்தின் வரவால் அனைத்துப் பணியாளர்க ளுக்கும் தேச விடுதலையின் வீச்சை நீ ஊட்டினாய்.

இதனால் எம் நெஞ்சமெங்கும் நிறைந்து நின்றாய் இன்று நீ இல்லையென்ற செய்தி கேட்டு கனத்த நெஞ்சங்களுடன் நாம் இங்கு.. .. ..

உயிருள்ள கல்லறைக்குள் உறங்குகின்ற விடுதலை வீரனே!

உன் போராட்டப் பயணத்தில் எம்பலம் வானுயர நின்றதை நீ கண்டாய்.

தலைவன் வழியில் நாளை தமிழினம் நிமிரும் தமிழீழம் மலரும் என்றே நீ சென்றாய்.

இன்று விதைகுழியில் உன்னை விதைத்து நிமிர்கின்றோம்.

களமும் புலமும் இணைந்து விடுதலையை வென்றெடுத்து வீரர் உம் இலட்சிய தாகத்தை ஈடேற்றுவோம் என்று உறுதி கொள்கின்றோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்





விடுதலைப் புலிகள் தமிழீழ

Liberation Tigers Of TAMIL EELAM

# தமிழீழ விடுதலைப் புலிகள்

பின்லாந்துக் கிளை

ஹெல்சிங்கி
பின்லாந்து


## வீரவணக்கம்

எமது தேசத்தின் விடுதலைக்காக, தனது உடல், பொருள், ஆன்மா அனைத்தையும் அர்ப்பணித்து, தானைத்தலைவனின் அடியொற்றி வீறுநடை போட்ட விறல்வேங்கை, லெப். கேணல் கலையழகனை நாம் இழந்து நிற் கின்றோம்.

கலையழகன் அற்புதமான அறிவாற்றலும், துணிச்சலும், தன்னம்பிக்கையும் கொண்ட ஒரு போராளி. சமர்க்களப் பணியானாலும், நிர்வாகப்பணியானாலும், துறைசார்ந்த எந்தப்பணியானாலும், தனக்கேயுரிய நுணுக்கமான ஆற்றலுட னும், நேர்த்தியுடனும்,அப்பணிகளை நிறைவேற்றும் ஆற்றல்படைத்தவர். எப்போதும் சிரித்தமுகத்துடனும், தன்னடக்கத்துடனும் காணப்படும் இவரிடம், அதீதமான ஆளுமை வெளிப்படும். செயற்பாடுகளில் இலட்சியவெறி தென் படும். ஒட்டுமொத்தத்தில், ஒரு விடுதலைப்போராளிக்குரிய சகல பண்புகளும் நிறைந்து அவர் காணப்பட்டார்.

தமிழின விடுதலைப் போரின் மையக்கருத்தாவாகிய எமது தேசியத் தலைவரின் எண்ணங்களை, அனைத்துலகமெங்கும் உள்ள தமிழின செயற்பாட்டாளர்கள் மத்தியில் விதைத்துவிட்டே, அவர் வீரச்சாவை அணைத்துக் கொண்டார். இனிவரும் காலங்களில், இம்மாவீரனின் கனவுகளைச் சுமந்தபடி எமது தேசியத்தலை வரின் கரங்களைப் பலப்படுத்துவோம் என்ற சபதத்துடன் இவ் வீரவேங்கைக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



லெப். கேணல் கலையழகன்

# தமிழீழ விடுதலைப் புலிகள்

சுவிஸ் கிளை

## வீரவணக்கம்

### லெப். கேணல் கலையழகன்

அனைத்துலகத் தொடர்பகத் துணைப்பொறுப்பாளர்
(சிவபாதசுந்தரம் ஞானசீலன்)

எதிர்பாரா நடந்திட்ட வெடிவிபத்தில்
விலைமதிக்க முடியா உயிரைத் தந்து
அனைத்துலகத் தொடர்பகத்தின் துணையாய் நின்று
வீறுடனே உழைத்திருந்த எங்கள் நண்பன்
கலையழகன் உயிர்நீத்த செய்தி கேட்டோம்
ஒருகணம் நாம் மனதுக்குள் அழுதபோதும்
மறுகணம் நாம் தேறுகின்றோம் மாவீரர்க்காக.






புவிமுழுதும் புகழ்பரப்பும் புலிகள் வீரம்
பேச்சென்று வந்ததனால் அடக்கம் கொண்டு
மென்போராய் நடத்துகின்ற காலம் தன்னில்
பெருமைமிகு புலிகள் பல இழந்து போனோம்
தலைவன் ஒருநாள் நிமிர்ந்து எழுவான் போரில்
திக்கெட்டும் அதிர்ந்துவிட படை நகர்த்தி
கலகலவெனத் தமிழரெல்லாம் சிரிக்கும் நாட்கள்
விரைவினில் தந்திடுவான் என்றே உள்ளோம்.

நீர்நடந்த பாதையது வெல்லல் வேண்டி
சோர்வின்றி உழைத்திருப்போம் விடுதலைக்காக
புவி ஒருநாள் எம்நாட்டைத் திரும்பிப் பார்த்து
புலிபடைத்த நாடிதுவா என்று தன்னுள்
வியப்புடன் பார்க்கின்ற வண்ணம் எங்கள்
தமிழீழத் தனியரசு மிளிரும் நாளில்
உம்போன்ற மாவீரர் ஒவ்வோர் பேரும்
மிளிர்ந்திருக்கும் விடுதலையின் வழித் தடமாக...

தமிழீழ விடுதலைப் புலிகள்
சுவிஸ் கிளை
20.04.2007




# உலகத்தமிழர் இயக்கம்
# World Tamil Movement

19-04-2007

## சோர்ந்து கிடந்த உறவுகளின் உயிர் வில்லில் நாண் பூட்டி, தடைகள் தகர்த்த தளபதி

கலையழகன்... அண்ணன் வழி நின்று பகையழித்து ஆடிய பேரலை... வார்த்தைகளை மீறிய ஆற்றல்களின் சொந்தக்காரன்... தமிழீழ வரலாற்றின் இன்னுமொரு மகத்தான பக்கம்... தேடித்தொகுத்தாலும் ஏறித் தொடமுடியாத சிகரம்... பல்லாண்டு காலமாய் ஓய்வின்றிச் சுழன்றடித்த ஒப்பற்ற புயல்... நெருப்பாற்றை நீந்திக்கடந்து நிமிர்ந்த பேரழகன்... சாதாரண மனித வாழ்வியக்கத்தை தாண்டி வரலாறு சுமந்த அற்புதத் தோழன்... உண்மைகளை உரைத்து உள்ளத்து உணர்வுகளில் தீமூட்டி இதயத்து வயல்களில் விடுதலை வித்தூன்றிய வீரவிறல்... எம்மைப் பிரிந்து விட்டார்.

எண்ண முடியவில்லை, உணர மனம் மறுக்கிறது, உறவுகள் ஏங்கி ஏங்கித் தேய்கிறது. தோழர்கள் வார்த்தையின்றி இறுகிப்போனார்கள். 'கலை' எங்களைக் கருணை கொண்டு கட்டிய அந்த பல்பரிமாண வித்தகனை இழந்து போனோமா?



அன்னையாய், நல்ல ஆசானாய், அன்புச் சகோதரனாய், ஆருயிர்த்தோழனாய் ஒவ்வொரு மணித்துளியும் தொடர்பில் இருந்து, ஒவ்வொரு அசைவிற்கும் வழிகாட்டி, சகல தடங்களிலும் உடனிருந்து, தலைவனின் அன்பையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து, சோர்ந்து கிடந்த உறவுகளின் உயிர் வில்லில் நாண் பூட்டி... தடைகளைத் தகர்த்து அனைத்தையும் ஒருங்கிணைத்த ஒப்பற்ற தளபதியை இழந்து தவிக்கின்றனர் கனேடிய தமிழ் உறவுகள்.




தனது நீண்ட காலமான போராட்டப்பணியில் மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்து எந்த சூழ்நிலையிலும் தளராது நின்று, கொண்ட கொள்கையில் உறுதியோடும், இலட்சியப்பற்றோடும் செயற்பட்ட மாவீரன் கலை அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

சர்வதேச ரீதியாக புலம்பெயர் தமிழுறவுகளை அணிதிரட்டி, அவர்களூடாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையை அனைத்துலக ரீதியாக தெளிவுபடுத்தி, அதனூடாக தமிழீழ விடுதலைக்கு உரம் சேர்த்து, தலைவருக்கு பக்கபலமாக நின்று, அவரது சிந்தனைகளை எந்தச் சூழ்நிலையிலும் செயற்படுத்தி, அனைத்துலகத் தொடர்பகத்தின் துணைப் பொறுப்பாளனாய் லெப். கேணல் கலையழகன் ஆற்றிய பணிகள் மகத்தானவை; வரலாற்றில் வரித்துக் கொள்ளப்பெற்றவை.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான முழுமையான பங்களிப்பில் புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக இறுதி வரை அயராது உழைத்ததுடன் அனைத்து மக்களும் பங்காளராக இணைந்து கொள்வார்கள் என்ற அதீத நம்பிக்கையுடனும் செயற்பட்டவர்.

அந்த நம்பிக்கையுடன், ஆயிரமாயிரம் மாவீரர்களின் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்ட எம்முயிர்த் தோழனின் நினைவுகளைச் சுமந்து அவருடைய இலட்சியக்கனவை நனவாக்குவோமென அனைவரும் உறுதியெடுத்துக் கொள்வோமாக.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**



**லெப். கேணல் கலையழகன்**

# தமிழீழ விடுதலைப் புலிகள்

டென்மார்க் கிளை


Liberation Tigers Of
TAMIL EELAM

## வீரவணக்கம்

உயிர் வாழ்வானது ஒரு சுழற்சியாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்றே பலரும் நம்பி வருகின்றனர். ஆனால் குமுகாய விடுதலைக்காக போராடுகின்ற ஒரு போராளியின் பட்டறிவு தாய்மை சார்ந்த உணர்வைப் பெறும் பாங்கில் வாழ்வு பற்றிய நம்பிக்கையை புறந்தள்ளி விடுகின்றது.

அப்படியாயின் வாழ்வானது ஒருமுறைதான் என்பதை போராளி அறிந்தே உள்ளான். அறிந்ததன் பயன் தாய்மொழிக்காகவும் மண்ணுக்காகவும் மாந்தருக்காகவும் வெங்களத்தில் எதிரிக்கு வேங்கையைப்போல நிற்கிறான்.

எம்மினம் சிறிதுதான் ஆனால் அதன் காரம் பெரியது; உலகை மலைக்கவைப்பது. சிங்களம் எம்மை ஒடுக்க முயன்றும் தோற்றுப்போய் நிற்கிறது






என்றால் தம்முயிரைப் பொருட்படுத்தாத ஒப்பில்லாப் புலிகளின் மாவீரமே காரணமாகும்.

இம் மாவீரத்தில் பங்கேற்ற ஒருவர்தான் மாவீரராகிய அனைத்துலகத் தொடர்பகத் துணைப்பொறுப்பாளர் லெப். கேணல் கலையழகன் ஆவார்.

சிறு அகவையிலேயே புலிப்படையில் இணைந்து கொண்ட இப்போராளி தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பற்பல களங்களில் பங்கெடுத்தவர். விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பல அழுத்தங்களைக்கொடுக்க உலகம் முயன்ற போதெல்லாம் புறமொதுக்கி வழிகாணமுயன்ற எம் தலைவருக்கு உறுதுணையாக நின்று செயலாற்றிய இம் மறவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் டென்மார்க் கிளை தனது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றது.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



லெப். கேணல் கலையழகன்

Liberation Tigers Of TAMIL EELAM

# தமிழீழ விடுதலைப் புலிகள்

பெல்ஜியக்கிளை


## வீரவணக்கம்

நெஞ்சினில் தீ சுமந்து
நெருப்பாற்றைத் தினம் கடந்து
விடுதலை வேள்வியில் தினமும் குளித்தவனே
விடுதலைப் பாதைக்கு புதுவொளி கொடுத்தவனே

சிறு வயதினில் உன்னை
விடுதலைக்காய் இணைத்து நின்றாய்
நினைத்த காரியம் யாவையும் முடித்து நின்றாய்
ஏற்றிட்ட பணியில் பல ஏற்றம் கண்டாய்
கலங்கமற்ற உன் களப்பணியில் காவியமாய் கலந்து நின்றாய்

காலங்கள் யாவிலும் நீ வாழ்வாய்
நாளை தமிழீழத் தாயின் கருவிலும் நீ வருவாய்

நீ ஞானத்தின் சீலனடா
உன் நாவிலும் தமிழ் வாசமடா
நாடிப் பணி வந்த போதும்
நீ தேடிப் பல பணி செய்து நின்றாய்
புலம் வந்து புதுவரிகள் தந்தவனே
புலம் பெயர் உறவுகளின் உணர்வினில் கலந்தவனே





உன் அறிவின் கூர்மையும் ஆற்றலின் மேன்மையும்
அன்னிய மண்ணிலும் உன் தேசத்தின் தேடல்கள்
தேவையின் நாடல்கள்
உன் தேசத்தின் நேசம் கண்டு வியந்தோம்
உன் வரவின் தேவையை உணர்ந்தோம்

உன்னோடு கூடித்திரிந்தோம்
குழாவி மகிழ்ந்தோம்
உன்னுள் தேடிப் பல தேடல் அறிந்தோம்

நாடி பிடித்து நல்லதையும் அறிந்தோம்
உனைத் தேடி வரும் காலனை ஏனோ நாம் அறிய மறந்துவிட்டோம்

உன் ஞாபகம் காணத்தானோ
உன் உடைகளையும் இங்கு களைந்து சென்றீர்
இது விதியாய் விதியன்றோ
உனக்கு வெடியாய் வெடி வந்து விடையாய் போனதன்றோ

இங்கு துடியாய் நாம் துடித்து துயரில் மூல்கிவிட்டோம் - இதற்கு
விடையாய் நாளை வரும் விடியல் எனும் தமிழீழம்
உன் கனவுக்குத் தோள் கொடுப்போம்
தமிழீழம் மீட்டு நிற்போம்

நீ கனவாய் கண்ணுறங்கு
உன் கனவினில் தமிழீழம் வரும்
மாசற்ற தமிழ் வீரனே
நீ தமிழீழத்திற்கு என்றும் காவலனே.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



**லெப். கேணல் கலையழகன்**


**COMITE DE COORDINATION TAMOUL - FRANCE**
**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்ஸ்**
**TAMIL CO-ORDINATING COMMITEE - FRANCE**

# இணைப்புப் பாலம்

கடலலை அள்ளிவந்து கரையில் தெளித்த நுரைகளாய்
உலகப்பந்தில் உலர்ந்து சேர்ந்த பலதமிழ் உறவுகள்
குளிரில் உறைந்தும் தணலில் வெந்தும் ஈழம்மறவா நெஞ்சங்கள்
கலைந்த கூட்டை சிறுகச் சிறுக கட்ட நினைப்பவர்
சாவினை வெல்லும் சத்திய வீரர்க்கு துணைநிற்பவர்.

நாகரிகம் மணிக்குப் பலமைல் போகவும்
அந்நிய நாட்டில் நம்மினம் காத்து நம்மொழி பேணி
அகதி வாழ்விலும் அகிலம் சாற்ற தடம் பதித்தோர்
இத்தனையும் இன்று சாத்தியமானது எப்படி?
சிதறிவிட்ட தமிழரின் தாயக இணைப்புப் பாலத்தால்!

அன்பினால் எம்மை இணைத்த கலையண்ணா!
அடம்பன்கொடியாய் நாம் இணைந்து நிற்க
அடித்தளமிட்டவர் வழிதொடர்ந்து செயற்பட்டவரே
அனைத்துலகத் தொடர்பில் ஒளியாய் திகழ்ந்தவரே
அகில உலகம் சாற்ற சேர்ந்தே உழைப்போம்
அண்ணன் தலைமையில் ஈழம் படைக்க - உங்கள்
கனவைப்போல இறுதிவரை இணைந்தே நடப்போம்.



தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
பிரான்ஸ்



# வீரவணக்கம்


தமிழீழ மண்மீட்பு போராட்டத்தில் தம்முயிரை தியாகம் செய்து வீரமரணமடைந்து, வித்தாகிய மாவீரர்கள் பல்லாயிரக்கணக்கில் அடங்குவர். இவர்கள் எமது உரிமைக்காய், எமது வருங்கால சந்ததியினரின் சுதந்திர வாழ்வுக்காய் தம்முயிரை கொடையிட்ட வள்ளல்கள்.

இந்த வகையில் அனைத்துலகத் தொடர்பக துணைப் பொறுப் பாளர் மாவீரர் லெப். கேணல் கலையழகனை நாம் இன்று இழந்து நிற்கின்றோம். போரில் மாத்திரமன்றி, உலகில் பரந்து வாழும் எம் தமிழ் மக்களை ஒருங்கிணைத்து வழி நடத்துவதிலும் சிறந்து விளங்கியவர் லெப். கேணல் கலையழகன். இவர் அனைத்துலகத் தொடர்பக துணைப் பொறுப்பாளராக இருந்து ஆற்றிய சேவைகள் அளப்பரியன.

இவர் கொண்ட நோக்கம் நிறைவேற, தமிழீழம் மலர, தமிழ் மக்கள் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ புலம்பெயர் மக்களாகிய நாம், தேசிய தலைமையின் கீழ் தோள் கொடுப்போம்.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

நியூசிலாந்துக் கிளை
பரப்புரைப்பிரிவு



**லெப். கேணல் கலையழகன்**

# தமிழீழ விடுதலைப் புலிகள்

நோர்வே கிளை

Liberation Tigers Of TAMIL EELAM

19.04.2007

## வீரவணக்கம்

### லெப். கேணல் கலையழகன்

அனைத்துலகத் தொடர்பகத் துணைப்பொறுப்பாளர்
(சிவபாதசுந்தரம் ஞானசீலன்)

விடுதலை வேள்விக்காய்
நெஞ்சினில் நெருப்பேந்தி
உழைத்த மறவனே

விடியலின் பிறப்பிற்காய்
கொடும்பகை எரிப்பிற்காய்
களம் கண்ட வேங்கையே

புலம் வந்து... தமிழரெம்
மனம்வென்ற தோழனே

ஈர நினைவுகள் சுமந்து
வீரனே உன்னை வணங்குகின்றோம்
நாளை மலரும் தேசத்தில்
உன்பெயர் நிலைத்து நிற்கும்
திருமுகம் மலர்த்தி வா தோழா!





யாவரும் கேளிர்

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - தென் ஆபிரிக்கா
TAMIL CO-ORDINATING COMMITTEE OF SOUTH AFRICA
(Registered Under Sec. 21 of Companies Act)

Publishers of: Tamil Mirror S.A. EDITION International (Voice of the Tamil People)

P.O.Box: 562216, Chatsworth - 4030
Tel / Fax: +27 31 4001415
E-mail: tgsa@iexec.co.za


19.04.2007

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமை வழி நின்று அயராது உழைத்த லெப். கேணல் கலையழகன் எவரும் எதிர்பாராத முறையில் மிக்க இளம் அகவையில் வீரமரணம் அடைய நேர்ந்தது எமக்குப் பெருந் துயரினைத் தருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்ப கத்தின் துணைப் பொறுப்பாளராக விளங்கிய இவர் இந்த நெருக்கடியான காலகட்டத்தில் எம்மிடமிருந்து பிரிய நேர்ந் தமை எம் இதயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இம் மாவீரர்க்கு தென்னா பிரிக்கத் தமிழர்களின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரி விப்பதோடு எமது வீரவணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின் றோம்.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
தென்னாபிரிக்கா



# லெப். கேணல் கலையழகன் அவர்களுக்கு எமது அஞ்சலிகளும் வீரவணக்கமும்

எங்கள் கலை அண்ணா!

கலை அண்ணா, கலை அண்ணா என்று எப்போதும் உங்களை அழைப்போம். இன்று அவ்வாறு அழைக்க நீங்கள் இங்கில்லை. எங்கள் பாசத்திற்கும் பெருமதிப்பிற்குமுரிய கலை அண்ணா! நீங்கள் இன்று எம்முடன் இல்லை என்ற நினைப்பே எம்மை விம்மி விம்மி அழ வைக்கிறது.

எப்போது சந்தித்தாலும் ‘வணக்கம். எப்படி இருக்கிறீங்கள்?’ என்று சொல்லிக்கொண்டு வரும் நீங்களும் உங்கள் புன்னகை பூத்த முகமும் என்றென்றும் உங்களோடிருக்கும் உங்கள் அழகான புன்சிரிப்பும் என்றென்றும் எம் நெஞ்சத்தில் இருக்கும். இன்று, உங்கள் புன்னகை பூத்த முகத்தையும் அழகான சிரிப்பையும் காணமாட்டோம் - நம்ப மறுக்கிறது எம் மனசு.

உங்களோடு பழகிய வாரங்கள்! உங்களோடு பேருந்துகளில் சென்று சுற்றிய நாட்கள்! உங்களோடு தொலைபேசியில் உரையாடிய நாழிகைகள்! எப்படி மறப்போம். அண்ணா, அந்த வாரங்களையும் அந்த நாட்களையும் அந்த நாழிகைகளையும் நினைத்து ஏங்குகிறோம்.






மனித வாழ்வில் மரணம் என்பது அனைவருக்கும் வரும். ஆனால் எப்போது வரும் என்று சொல்லிக்கொண்டு வராது. சிலருக்கு இளைய வயதிலேயே வரும். சிலருக்கு முதிய வயதில் வரும். எங்கள் கலை அண்ணனை மரணம் முப்பத்தோராவது அகவையிலேயே அணைத்துக்கொண்டது. எமது தேசியம் விடிவுபெறும் நாள் மிக விரைவில் வரும். அந்நாளை காணாமல் சென்று விட்டீர்களே!

உங்களுடன் பல பயணங்கள் சென்றோம். ஆனால் உங்களது இறுதிப் பயணத்தில் இன்று நாம் கலந்துகொள்ள முடியவில்லையே என நினைக்கும் போது உள்ளம் அழுகிறது.

ஒவ்வொரு மனிதனும் தத்தமது தேவைகளை மட்டும் கவனிக்கும் இவ்வுலகில், எமது தேசத்தின் விடியலுக்காக, தமிழன் மானமுடனும் சுதந்திரத்துடனும் வாழவேண்டும் என்பதற்காக, தம்முயிரை துச்சமென மதித்து எமது மண்ணுக்கு உரமாகிய ஆயிரமாயிரம் மாவீரர்களுடன் இன்று நீங்களும் மண்ணுக்கு வித்தாகிவிட்டீர்கள். அந்த வித்து விருட்சமாக வேண்டுமெனில், நாம் சுதந்திர தமிழீழத்தை வென்றெடுக்க வேண்டும். எங்கள் தலைவர் தலைமையில் எம்தேசத்தை வென்றெடுப்போம் என உறுதி எடுப்போம்.

**தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்**

வடமேற்கு இலண்டன் பணியகம்
இலண்டன்
ஐக்கிய இராச்சியம்



# தமிழீழ விடுதலைப் புலிகள்

சுவீடன் கிளை

## வீரவணக்கம்

தமிழரின் விடுதலைக்காய் சரித்திரம் தன்னில்
பெயரெழுதிச் சென்ற மறவனே!
சர்வதேச உலகில் எம் போராட்ட வரலாற்றுக்கு
முகவுரை எழுதிச் சென்றாய்!

சர்வதேச சவால்களை உடைத்து - கலையே நீ
ஓர் களம் அமைத்தாய்!
தமிழரின் விடுதலைப் பாதையில் - புலியே நீ
புதியதோர் அத்தியாயம் வரைந்தாய்!

அனைத்துலக தொடர்பகத்தில் தொடரும்
உன் பணியென காத்திருந்தோம் நாம் - ஆனால்
இன்று உன் மரணம் எம்மை
கண்ணீரிலல்லவா ஆழ்த்திவிட்டது.

கண்களில் நீர் சுமந்து
செலுத்துகிறோம் அஞ்சலிகள்!
விடியும் நேரம் மிகவிரைவில்
பறக்கும் புலிக்கொடி உன் தாய் மண்ணில்.






# தமிழீழ விடுதலைப் புலிகள்

இத்தாலிக் கிளை

மேற்பிராந்தியக் கிளை
இத்தாலி

## வீரவணக்கம்

இனியவனே கலை அழகனே
காலை உதயக் கதிர்க் கீற்றே
தலைவனின் விளிகளில் சுழன்ற தீப்பொறியே
தாயக மடி தொடங்கி புலத்தாய் மடி வரை
உறவுப்பாலமிட்ட தமிழ்த்தாய் திருமகனே
தேசியப் பண் ஒலிக்குமுன்
உன் வாழ்வெல்லை வீரச்சாவினை கண்டதோ
நண்பனே தமிழ் நேசனே
பல களச்சமர்களில் சுழன்றடித்து
முத்திரை பதித்தாய்
செஞ்சோலைச் சிறார் இல்ல வளர்நிலை
வித்தூன்றி உயர் பண்பாளனானாய்
செதுக்கிய தாயக சிற்பிகளில் நீயும் ஒருவனாகி
தமிழீழ மக்களின் நெஞ்சங்களில்
நிலைத்து நீ வாழ்வாய்
தேசத்து நேசர்கள் நாம் உம்பணி தொடர்வோம்.



லெப். கேணல் கலையழகன்

# வீரவணக்கம்

## லெப். கேணல் கலையழகன்

(சிவபாதசுந்தரம் ஞானசீலன்)

விடியலின் கண்சொரியும் நீர்த்துளியில்
ரத்தம் வடிகிறதே!
இடிமுழங்கும் போர் முகத்தில் நின்ற
கலையழகன் சாவுகண்டு
விடியலின் கண்சொரியும் நீர்த்துளியில்
ரத்தம் வடிகிறதே!

வரிப்புலிகள் வார்த்தெடுத்த வீரக்குன்றே
சிரித்துச் சிரித்து சிந்திக்க வைப்பாயே
நீ எங்கு சென்றாய் நண்பா?

பொருதவரும் பகைவர் படையை
அழித்தொழிக்கும் மறவனே!
கருத்துக்கண்ணில் ஈழம் பதித்து
நிமிர்ந்து சென்ற வீரனே






அனைத்துலகப் துணைப் பொறுப்பேற்று
வழிகாட்டிய தோழா
இணையில்லா தலைவனின் ஆணை கேட்டு
வீறு கொள்ளும் மறவா

வான் பரப்பில் புதுமை படைக்க
பார்த்து மகிழ்ந்த கண்கள்
ஊன் உறைந்து விழி மூடி
மௌனித்து நிற்கிறதே
எத்துறையில் இல்லை உன் பங்ளிப்பு
எண்ண எண்ண கனக்கிறதே....

சத்தான தமிழீழம் மலரவென்று
சாதனை படைத்த வீரா
தாயகம் வருகையில் அன்பு காட்டி
கொள்கை விளக்கம் செய்தாய்
தாயக விடிவின் வேள்வித் தீயில்
சுவாலையாய் சென்றாயோ?

நாளை மலரும் தமிழீழ மண்ணில்
உனது வேரும் பதியும்
வானைப் போன்ற சுதந்திர விடிவில்
உந்தன் ஒளியும் வீசும்.

தமிழீழ விடுதலைப் புலிகள்
டென்மார்க் கிளை



# வீரவணக்கம்


பேரிடியொன்று...
காதிரைக்கவில்லை.... கந்தக நெடியுமில்லை..
வாய்வரண்டு நெஞ்சுபதற வெடியோசையாய் வந்திறங்கியது...
கலை... உன் பிரிவுச் செய்தி.

கண்கள் கரிக்கின்றது
உறவுகளின் உயிர்இருப்பை தொடர்வலைத் துளாவில்மட்டும்
அறிந்துகொள்ளும் எம் துர்ப்பாக்கிய நிலைகண்டு
கண்கள் கரிக்கின்றது.
அகங்குளிர வரவேற்று அளவளாவி சினேகிதித்த
முகங்கண்டு அழுவதற்கு முடியாத நிலைகண்டு
கண்கள் கரிக்கின்றது.

அலையடிப்பில் அழிந்துவிடும் தடங்கலாக இல்லை
'கலை' உன் ஞாபகங்கள் - எமக்கு
இதயத்தின் வேரூன்றலாய்... வரலாற்றின் செதுக்கல்களாய்.....
பத்திரப்படுத்தப்பட வேண்டியவை - படிப்புகளவை.

மைல்களுக்கப்பால்...
கண்டங்கள் கடந்து...
கரைதெரியாச் சமுத்திரத்தில் காரிருளில் அகப்பட்டோராய்
உறவுகளின் முகவரியோ உதவிடும் மார்க்கமோ
அறிந்திரா அபலைகளாய் அலைக்கப்பட்டபோது...
கலங்கரை விளக்கமாய் 'கலை' உன் அறிமுகம்.
வழிப்படுத்தினாய்..

வையகம் முழுவதும் சிதறிக்கிடந்த எமை
நெறிப்படுத்தினாய்
செல்லரிபட்ட எம் தேசத்தின் சுவர்களை
சீர்படுத்தினாய்.






முறுவல் மாறா உன் சினேக வார்த்தைகளால்
சிறைப்படுத்தினாய்
அன்பினால் எமையெல்லாம் சிறைப்படுத்தினாய்
தேசத்திற்கப்பாலும் சில சீழ்க் கைகள் நீண்டுவந்து
எமது வாய் பூட்டும். வசவு பாடும்.
சிறையில் தள்ளி சீரளித்து
ஊடகங்களிலும் ஒப்பாரி வைக்கும்
மனமுடைந்து நாம் நடைதளரும் இத்தருணங்களில்
கலையழகா! நீதானே......
உற்சாக வார்த்தைகளால் எமக்கு ஊட்டமளிப்பவன்
குலைந்திடாமல் எம்மைக் குவியப்படுத்துபவன்
வேலைத்திட்டங்களால் பணிகளை வேகப்படுத்துபவன்
புதுப்பொலிவுடன் அமைப்பை கட்டியெழுப்புபவன்.

ஏற்குதில்லை எம் நெஞ்சம்
'கலை' இனி இல்லையென்பதை
நேற்றுப்பேசிய வார்த்தைகள் கூட இன்னும்
காற்றின் கரங்களில் ஈரலிப்பாய் இருக்கையில்
ஏற்குதில்லை எம் நெஞ்சம்
'கலை' இனி இல்லையென்பதை.

துவளோம் இனி சோர்ந்திடோம் இனி
அழுவதற்கா உன் வீழ்ச்சி? - விசுவரூபமெடுத்து
எழுவதற்கல்லவா விதையின் வீழ்ச்சி - உன்
பட்டறையில் பதிபோட்ட பலவிழுதுகள் இன்று
விருட்சித்து நிற்கின்றன கொள்கைக்கனி சுமந்து
கட்டியெழும் தேசத்தின் கற்றூணே - உன்
கைவண்ணத்தாலின்று உலகமெலாம் தேசத்தின் தூண்கள்.

நம்பிக்கையோடு விடைபெறு நண்பா - நாம்
சுதந்திர தேசத்தில் நிச்சயம் கால் பதிப்போம் - உனது
முறுவலும் பேச்சும் உழைப்பும் மூச்சும்
காற்றுடன் வந்து நிச்சயம் கைகுலுக்கும்.

வீர வணக்கங்களுடன்
செயற்பாட்டாளர்கள்
உலகத்தமிழர் இயக்கம், ஒட்டாவா, கனடா.



**லெப். கேணல் கலையழகன்**

# வீரவணக்கம்


## லெப். கேணல் கலையழகன்

தமிழினத்தின் விடிவிற்காய் புலியானாய்
தலைவன் சிந்தனைக்கு வலுச்சேர்த்து
போர்க்களம் தன்னில் வீரப்படையோடு
தமிழினத்தின் விடிவிற்காய் காத்திருந்தாய்.

புலம்பெயர் மண்ணிலும் புலிகளின் திறம் விளம்பி
மனம் திறந்து பழகி எம்மனதில் இடம்பிடித்தாய்
வீரனே உன் கனவை நாம் சுமந்து
எம் தலைவன் சிந்தனைக்கு வலுச்சேர்ப்போம்.

எம் விழியில் நீர் கசிய உம் நினைவை தான் சுமந்து
விழிமூடி தோழனே வணங்குகின்றோம்.
தமிழீழம் மலரும் - மாவீரனே உன் விழிகள்
அதைப்பார்க்கும்.

அது வரையில் கல்லறையில் காத்திருப்பாய்
கண்ணீரால் மலர்தூவி கல்லறைக்கு அனுப்புகிறோம்
நண்பனே அடுத்து எம் பணிக்கு
ஆயத்தம் ஆகிவிட்டோம்.




தமிழர் ஒருங்கிணைப்புக்குழு,
துணைஅமைப்புக்கள்
நெதர்லாந்து.



# வீரவணக்கம்

களங்கள் பல கண்டு இன்று
காவியமான கலையழகே
தமிழின விடிவிற்காய் தாங்கள்
தன்னலமில்லா சேவை செய்தீர்
ஒருபோதும் ஓய்வில்லா சூரியப்
பிள்ளையாக வளர்ந்து வந்தீர்
விடியலின் வாசலில் நாம்
காத்திருக்கும் வேளையில்
எதிர்பாரா விபத்து உன்னை
அழைத்துச் சென்றதோ
பலிகொள்ளும் பறவையை நாம்
பறித்தெடுக்கும் காலம் வரும்
உரிமையோடு பழகுதற்கு உமக்கு
ஒரு நிமிடம் போதுமையா
பாசத்துடன் பழகுகின்ற உங்கள்
பக்குவத்தைப் பார்த்து வியந்தோம்
இறுதியான வேளை என்று நாங்கள்
ஒருபோதும் நினைத்ததில்லை



எம் தமிழ் உறவுகளின் கண்ணீர்
கட்டுக்கடங்கவில்லையையா
தலைவன் பாசறையில் ஒரு
தங்க மனிதன் தவறிவிட்டான்
கொள்கை மாறா புலி வீரன் தமிழீழ
விடுதலைக்கு வித்தானான்
தமிழீழ தேசமெங்கும் விடுதலைக்
காற்றாக வீசுகின்றாய்
தமிழீழ உறவுகளின் உயிர்
மூச்சோடு கலந்து விட்டாய்
கொல்லுகின்ற சிங்களம் இனிமேல்
கொக்கரிக்கக் கூடாது
துயர் தாங்க முடியவில்லை - நாங்கள்
புலத்திலிருந்து துடிக்கின்றோம்
அழுதழுது களைத்து விட்டோம் - எம்மை
ஆற்றுதற்கு யாருமில்லை
ஆறாத துயரோடு தங்கள்
பாதங்களை வணங்குகின்றோம்
துயர் நிறைந்த மனதோடு மலர்தூவி
வீரவணக்கம செலுத்துகின்றோம்.

சுவிஸ் மகளிர் அமைப்பு





# வீரவணக்கம்

## லெப். கேணல் கலையழகன்

(சிவபாதசுந்தரம் ஞானசீலன்)

வீரச் செருக்கேறிக் கிடக்கும்
எம் மண்ணில்
விதையுண்டு போயிருக்கின்றது
மற்றுமொரு வித்து

கலையழகன்

விலையிலா வீரத்தை
நினைவெங்கும் நிறைத்து
வெந்தழல் வேங்கையாய்
வெஞ்சமர் வென்றாடி
செந்தமிழ் நிலம் காத்த
எம்புலப் புலியே

விடிவின் ஒளி நோக்கி
விரையும் எம் வேந்தன்
வழி நின்று வாழ்ந்த வரலாறே...
வியந்தெங்கும் விழி பார்க்க
செயல் சிறந்த செம்மலே...


நீ நடந்த தடம் யாவும்
தீப் பிழம்பாகி விண் தாவும்
சூரியச் சுவர் மோதி
ஈழவர் வீரியம் கூறும்.

மறக்குல மணியே
எம் மண்ணின் புனிதமே

நீ எழுந்த திசையில்
நீளும் வேங்கையர் வேகம்
நாளை பகை வென்று மீட்கும்
நமக்காய் எம் தேசம்.

புதிதாகும் பூமியெங்கும்
கலையழகே உன் புகழ்
ஓதி உலா வரும் ஈழத்தென்றல்...

உயிர்த்தமிழ் உறவுகள்
கனடா




# மின்னலாய்
# மறைந்தானே
# மண்புலம்ப!..

லெப். கேணல் கலையழகனின்
இழப்பைத் தாங்காது துயரச்
சுழற்காற்றுப் புகுந்த சிந்தையோடு
விழிநிறையச் சில வரிகள் விரித்தேன்.

நீதிக்குப் போராடும் எம் நிலத்தின்
அனைத்துலகத் தொடர்பகத் துணைப்
பொறுப்பாளனாய் நீ அன்று இந்தப்
பனி நிலத்திற்குப் பவனிவந்தாய்!

தென்றலாய் சிரிப்பு உதிரும் இளைய
பண்பூத்த முகமும் - அன்பு
இழைந்த பேச்சும் இணைந்த நீ
என்னவாய் எம்மோடு பழகி மீண்டாய்!





மன்னன் மறத்தமிழன் மாண்புடையான்
அண்ணன் தேர்ந்து நியமித்த
பொருந்து திறனுடைய தொண்டன்
பேராளன் கலையழகன் போய்விட்டான்...

சிந்தனைச் சிற்பி நீ சிறியவன் மேலும்
சிறந்தோங்கி மிளிருவாய் - எனவே
உவந்தேநாம் எதிர்பார்த்து இருந்தோமே
நீ பிரிந்தாய் என்றால் பொறுப்போமோ?

எத்தனை எழிலான கனவுகளை ஏந்தி
இனவாத அரக்கத்துக்கு எதிராக
வேய்ந்த உறுதியோடு வெளிப்பட்ட
புலியே நீ வெடிமூண்டு பலியாகவோ!

போரில் பழகும் புதுமைக் கருவிகள்
கரமெடுத்து இயக்கியும் - அரசியல்
அறிவு விரவியும் வாழ்ந்த பிள்ளை
மின்னலாய் மறைந்தானே மண்புலம்ப!

அணியணியாய் இனத்தின் பிணியகற்றப்
பணிசெய்து மரணித்த மாவீரரோடு
கனிவின் உருவே நீ கலந்திட்ட போதும்
அனைத்துலகோர் அகங்களிலும்
நிலைத்திருப்பாய் நீடு!

ந. கிருஷ்ணசிங்கம்.
நோர்வே.



**மாவீரர் லெப். கேணல் கலையழகன் நினைவாக....**

# நாங்கள் அழுதது போதும் வாருங்கள் எழுவோம்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்பக துணைப் பொறுப்பாளர் லெப். கேணல் கலையழகனின் சாவில் துயருறும் அனைவரினதும் வேதனையுடன் அனைத்துலக தமிழர் கூட்டமைப்பும் தன்னை இணைத்துக் கொள்கின்றது. தமிழீழ தேசிய தலைவர் 50 அகவையடைந்ததையொட்டி அனைத்துலக தமிழர் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட ஆவணத்தைப் பெற்றெடுப்பதற்கான உழைப்பினை வழங்கியவர் லெப். கேணல் கலையழகன் என்பது இந்தத் தருணத்தில் நினைவுக்கு வருகின்றது.

சிரித்த முகத்துடனும் - நா நிறைந்த அன்புடனும் அனைவரையும் வரவேற்கும் அவரது பண்பு புலத்தமிழ் செயற்பாட்டாளர்களின் நினைவில் என்றும் அழியாது நிலைத்து நிற்கும். அனைத்துலக சமூகத்தின் அனுசரணை அல்லது தலையீட்டுடன் கூடிய சிறீலங்கா - தமிழீழ பேச்சுவார்த்தை முயற்சிகள் முறிவடைந்து போர் தவிர்க்க முடியாத உண்மையாக தமிழர் தாயகம் எங்கும் வியாபித்து நிற்கின்றது. சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு முரணாக சிங்கள தேசம் தமிழர் தாயகத்தினை விமானங்களாலும், பீரங்கிகளாலும் தரைமட்டமாக்க முயன்று வருகின்றது. பொதுமக்கள் கொல்லப்பட்டும், இடம்பெயர்ந்தும் வருகின்றனர். பலநூறு போராளிகள் இந்த உண்மைக்கு முகம் கொடுத்து மாவீரர்களாக தங்களை விடுதலைக்கு ஒப்படைத்துள்ளனர்.

மறுபுறம், சர்வதேசரீதியாக தமிழீழ விடுதலைக்கான குரலை நசுக்கும் முயற்சிகளை சிங்கள தேசம் முன்னின்று மேற்கொண்டு வருகின்றது. சர்வதேச சக்திகளின் பிராந்திய மற்றும் இந்து சமுத்திர நோக்கங்கள் சிங்கள வியூகத்திற்கான தந்திரமாகி - புலத்தமிழ் சமூகத்தின் சன நாயக உரிமைகளைக் கூடப் பறிக்கும் சதி முன்னெடுக்கப்படுகின்றது. புலிகளுக்கு






எதிரான தடை நடவடிக்கைகள், சில நாடுகளில் புலிகளிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் பயங்கரவாத சட்டங்களின் கீழான நடவடிக்கைகள் என தமிழீழ மக்களின் விடுதலைப் போர் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் அதிகரித்துள்ளன.

இது சர்வதேச சமூகம் தொடர்பான எமது நம்பிக்கையினை பெரும் கேள்விக்குள்ளாக்குகின்றது. பெரும் போர்க்குற்றங்களைப் புரியும் சிங்கள அரசுக்கு எதிராக எதுவித தாக்கமுள்ள நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல், தமிழர்களும் - புலிகளும் வஞ்சிக்கப்படுவது சர்வதேச உறவுகள் பற்றிய புரிதலையும் எமது மக்களுக்கு ஏற்படுத்துகின்றது.

இந்தப் புரிதலில் இருந்துதான் சர்வதேச சமூகம் தொடர்பான புலத் தமிழர்களின் செயற்பாடுகள் கிளர்ந்தெழல் வேண்டும். 3 தசாப்தங்களுக்கு முன்னர் Edward De Bano எனும் சிந்தனையாளர் எழுதிய Use of Lateral Thinking எனும் நூலில் வெளிவந்தவொரு உதாரணம் இந்தக் காலத்தினைக் கையாள்வதற்கான பாதை பற்றிய விவாதத்திற்குப் பொருத்தமானது.

நீண்ட காலத்திற்கு முன்னர் கடன் வாங்கியவர்கள் கடனை முறையாக செலுத்தாவிட்டால் சிறைக்குள் தள்ளப்படுவார்கள் என்ற சூழல் நிலவிய காலகட்டத்தில் ஒரு லண்டன் வியாபாரி தான் பெற்ற கடனை திரும்ப செலுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டான். கடனைக் கொடுத்தவன் இந்தச் சிக்கலை பயன்படுத்தி தான் நீண்ட நாட்களாக மோகம் கொண்ட வியாபாரியின் மகளை பணயப் பொருளாகப் பெற விரும்பினான். அவளை தனக்கு தருமாறு கோரினான். அதனை வியாபாரி ஏற்றுக்கொள்ள மறுத்த போது அவன் ஒரு தீர்வைக் கூறினான். அதாவது, தனது பையில் ஒரு வெள்ளை கல்லையம், கறுப்புக் கல்லையும் போடுவதாகவும் ஏதாவது ஒரு கல்லை அந்த இளம்பெண் தேர்வு செய்ய வேண்டும் எனக் கூறினான். அப்போது வெள்ளைக் கல்லு வந்தால் அந்தப் பெண் தன்னை திருமணம் செய்யத் தேவையில்லை - கடனும் திரும்பத் தரத் தேவையில்லை. கறுப்புக் கல்லு வந்தால் அவள் திருமணம் முடிக்க வேண்டும் - கடன் திருப்பத் தேவையில்லை. கற்களை எடுக்க மறுத்தால் வியாபாரி கடனை தராத குற்றத்திற்கு சிறைக்குள் அனுப்பப்படுவார். இந்த ஏற்பாட்டிற்கு வியாபாரி உடன்பட வேண்டியதாயிற்று.




தனது தோட்டத்தில் இந்த குலுக்கலுக்காக கற்களை அந்த கடன் கொடுத்தவன் எடுத்தான். அவன் அப்போது இரு கறுப்புக் கற்களையே எடுத்து பையில் போடுவதை அந்த இளம் பெண் பார்த்து விட்டாள். அவள் என்ன செய்வாள்?

அவள் கற்களை எடுக்க மறுக்க வேண்டும், அல்லது இரண்டும் கறுப்புக் கற்கள் தான் என்று பகிரங்கமாகச் சொல்லி அவனை அம்பலப்படுத்த வேண்டும் அல்லது கற்களில் ஒன்றை எடுத்து அவனை திருமணம் முடிக்க வேண்டும். இவை ஒன்றும் அவளுக்கு ஏற்புடையதல்ல. அவள் ஒரு கல்லை எடுத்து அது என்னவென்று பார்க்க முதலே அதனை தோட்டத்தில் வீழ்த்தி தொலைத்து விடுகின்றாள். தான் தவறுதலாக வீழ்த்தி விட்டேன், இப்போது மறுகல்லு என்ன என்று பார்த்து வீழ்ந்தது என்ன கல்லு என்று தீர்மானிக்க வேண்டும் என கேட்கின்றாள். தான் இரண்டு கறுப்புக்கற்களைத் தான் பையில் போட்டேன் என்று அடம்பிடித்து தன்னை நேர்மையற்றவனாக வெளிக்காட்ட கடன்கொடுத் தவன் பயப்படுவான் என்று நம்பி அந்த இளம்பெண் இவ்வாறு செயற்பட்டாள்.

இது மரபுவழியாக சிந்திப்பதற்கும், மரபுசாராமல் சிந்திப்பதற்கும் இடையேயான முரண்பாட்டைக் காட்டும் உதாரணம். இங்கு கடன் கொடுத்தவன் தான் நேர்மையில்லாதவன் என்பதை ஒப்புக்கொள்ளமாட்டான் என நம்பி தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் உத்தியை அந்தப் பெண் பயன்படுத்து கின்றாள்.

எங்களின் சர்வதேச உறவாடல் சிந்தனைகளுக்கும் இது பொருந்தும். புலத்தமிழ் சமூகமும் கறுப்புக் கற்களையே பையில் வைத்துள்ள சர்வதேச சமூகம் பற்றிப் பேசப் பயந்து சர்வதேச சமூகத்தின் நேர்மை பற்றிய பிரமிப்புடன் செயற்படுவதாக Black Pebbles & White Pebbles எனும் கட்டுரையில் நடேசன் சத்தியேந்திரா எனும் ஆய்வாளர் விமர்சிக்கின்றார். இந்த அணுகுமுறையின் வெளிப்பாடுதான் சர்வதேச சமூகத்தினை விழிப்புற வைப்பது என்கின்ற மிக சாதாரண சிந்தனையென்கின்றார்.



புலத்தமிழ் சமூகம் சர்வதேச சமூகம் பற்றிய மதிப் பீட்டை இன்றைய அனுபவங்களில் பெற்றுக் கொண்ட அறிவினைப் பயன்படுத்தி மீள் மதிப்பீட்டிற்குட்படுத்தல்



வேண்டும். சர்வதேச சமூகத்தினை விழிப்புற வைப்பது, நீதி கேட்பது, மன்றாடுவது என்பன போன்ற தொடர் செயற்பாடுகள் அனைத்திலும் நாங்கள் எங்களை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

சிறீலங்கா அரசின் பயங்கரவாதம், மனிதவதை, போர்க்குற்றங்கள் என்பன அனைத்துமே சர்வதேச சமூகத்திற்கு தெளிவாக புரிந்தவை. எனினும், நலன்கள் எனும் அச்சில் கட்டப்பட்ட சர்வதேச உறவுகளால் புலிகளை தடைசெய்வது, பயங்கரவாதிகளாக்குவது போன்றன இடம்பெறுகின்றன. இந்த உண்மையை உணர்ந்து புலம் தன்னை கடுமையான தொடர்பாடல் போரிற்கு தயார்படுத்தல் வேண்டும்.

நாங்கள் சர்வதேச சமூகம் எனப்படும் மேற்குலகுடன் இனிப் பேச வேண்டும். உங்களின் நலன்கள், எங்களின் நலன்கள் என்கின்ற அச்சில் யோசிக்க வேண்டும். ஒன்றையொன்று சந்திக்காத நலன்கள் முரண்பாட்டைத் தான் தோற்றுவிக்கும் என்பதை விவாதப் பொருளாக்க வேண்டும். புலிகள் இல்லாத புலத்தமிழ் சமூகம் சாத்தியமற்றது என்பதை வெளிப்படையாகவே தெரிவிக்க வேண்டும். ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் மக்களின் தேசிய எழுச்சியின் தலைமையான புலிகளை அன்னியப்படுத்திவிட்டு புலத்துடன் சர்வதேச சமூகத்தால் தொடர்பாடல்களை மேற்கொள்ள முடியாது என்பதை புரியவைக்க வேண்டும்.

தடைவிதித்தலும், நடவடிக்கை எடுத்தலும் வெறும் பின்விளைவுகளற்ற ஒற்றைச் செயற்பாடுகள் அல்ல என்பதை விவாதிக்க வேண்டும். உண்மையின் மீதும், நியாயங்கள் மீதும் கட்டப்பட்டுள்ள தமிழர் விடுதலைப் போரினை எந்த நெருக்குவாரங்களும், சனநாயக மறுப்புக்களும் ஒருபோதும் தோற்கடிக்க முடியாது. சர்வதேச உறவாடல்களில் நாங்கள் அழுதது போதும் - வாருங்கள் எழுவோம்!

அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு
ஜெனீவா
ஏப்பிரல் 2007
தொடர்புகட்கு: ift@bluewin.ch




# வீரவணக்கம்

## லெப். கேணல் கலையழகன்

அனைத்துலகத் தொடர்பகத் துணைப்பொறுப்பாளர்
(சிவபாதசுந்தரம் ஞானசீலன் - யாழ். மாவட்டம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்பகத் துணைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கலையழகன் 18.04.2007 அன்று வீரச்சாவடைந்த செய்தியறிந்தோம். எமது தேச விடுதலைச் சக்கரத்தின் அச்சாணியாக தங்கள் உயிர்களைத் தியாகம் செய்து வரும் மாவீரர்களில் ஒருவராக லெப். கேணல் கலையழகன் அவர்கள் எமக்குள் எம் உணர்வுக்குள் கலந்துவிட்டார். அவரின் வீரமரணத்துக்கு தலைசாய்த்து அஞ்சலி செய்கின்றோம்.

- சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் -





தமிழ் இளையோர் ஒருவர் எமது தாய் மண்ணில் காலடி எடுத்து வைத்து அங்கு செல்லும்பொழுது விடுதலை வீரர்களுடன் நட்பு உண்டாகின்றது. இவர்கள் எங்கு சென்றாலும் தமிழ் மக்களோடு தாங்களும் ஒன்றாகப் பழகுவது கண்ணுக்குத் தெரிகின்றது.

கலையழகன் அண்ணா ஒரு விடுதலை வீரன். மகிழ்சியான ஒரு இளம் மனிதன். நாம் தாய் மண்ணில் கால் வைத்த நிமிடத்திலிருந்து எமது அன்பு நண்பர் ஆனார். இவர் எங்களுக்கு பல பகிடிகளைச் சொல்லி சிரிக்கவைத்தார். ஏதாவது பிரச்சனை இருந்தால் தனது புத்திமதிகளைக் கூறினார். இவரின் புன்சிரிப்பு நாம் தமிழீழத்தைவிட்டு திரும்பும் பொழுது அழுகையாக மாறியதைக் கண்டு எமது மனம் துக்கப்பட்டது.

நினைத்துப் பார்க்கும்பொழுது அநேக நினைவுகள் மனதிற்கு வருகின்றன. கலையழகன் அண்ணா தனக்கு ஒரு இரட்டைப்பிறவி இருக்கின்றார் என்று எங்களை நம்பவைக்கப்பார்த்தது, அடம்பிடித்து தான் எங்களுக்குப் பக்கத்தில் கட்டாயம் இருக்கவேண்டுமென்று மற்றவர்களோடு பேருந்தில் போட்டிபோடுவது, மற்ற ஆண் இளையோர் தன்னை அழகானவரென்று கூறியதும் அவர் வெட்கப்பட்டது...


நாம் அவுஸ்திரேலியாவிற்கு வந்தபின்னும், எங்கள் எல்லோருடனும் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலமாக தொடர்பு வைத்திருந்தார். இவரின் இனிய குரலைக்கேட்டு எங்களுடைய இதயங்கள் சந்தோசப்பட்டன. ‘வணக்கம். நான் இங்கே கலையழகன் கதைக்கின்றேன். எப்படி இருக்கின்றீர்கள்?’ என்று அன்போடு விசாரிப்பார்.

இந்த இனிமையான குரலை நாம் இனிமேல் கேட்கமாட்டோம் என்று நினைக்க, எமது நெஞ்சங்கள் துடிக்கின்றன.

கலை அண்ணா எங்களுடைய மரியாதையையும் நெஞ்சங்களையும் வென்றவர். நாங்கள் எல்லோரும் இவரின் குரலை, சிரிப்பை, பகிடிகளை இழந்துவிட்டோம்.

கலை அண்ணா, எங்களை சிரிக்கவைத்ததற்கு பணிவார்ந்த நன்றிகள். உங்களை உடம்பால் இழந்துவிட்டோம், ஆனால் மனதால் ஒரு நிமிடமும் மறக்கமாட்டோம்.

தமிழ் இளையோர் அமைப்பு
அவுஸ்திரேலியா



Every TYO member who has set foot in Tamil Eelam knows, when you visit the homeland, it is inevitable to not build a relationship with a freedom fighter. They are everywhere you go; they mingle amongst the people.

Kalai Alagan Anna was one such freedom fighter. He was a young, charming anna, who befriended us when we set foot on our home soil. He joked with us, advised us, and shed tears when we left.

We can still recall our moments with him – when he convinced us that he had a twin, when he competed with others to sit next to us on the bus so he could entertain us with his kadi jokes, when he blushed as he heard the boys from our group comment on how good looking he was.


Kalai Anna, as we lovingly referred to him, made the effort to keep in touch with those of us he met in Tamil Eelam. He put a smile on our faces with his regular emails, and our hearts skipped a beat when on our phones we heard the familiar "Vanakkam. Naan ingey Kalai Alagan kathaikkiren. Eppadi irukkireengal?"

To accept that we will no longer hear that sweet caring voice is too much to bear.

Kalai Anna earned our respect with his wisdom, and won our hearts with his humour. We will miss his emails, his calls, the sound of his voice and the warmth of his smile. But most of all, we will miss his jokes.

Kalai Anna, thank you for making us laugh. We will miss you so very much.





Tamil Youth Organisation
Australia
18 April 2007



# கல்லறை விதை

கல்லறைக்குள் கருவானவனே
நீ விழவில்லையடா
மீள எழுவதற்காய்
நீ விதைக்கப்பட்டுள்ளாய்.

பாசத் தோழனாய்
தேசக் காவலனாய்
எம்முள்ளே வாழ்ந்திட்ட
வீரப்புலியடா நீ.

தேச உறவுகளை
தேசியத் தலைவனின்
அணி நடக்க
தொலைதூரப் பணி எடுத்து
சுமையோடு சுழன்றடித்த
சாணக்கியப் புலி நீ.

உன் பணி வெளிவரா
விருட்சங்களாக
உன்போலவே அதுவும்
அமைதியாகக் கிடக்கிறது
காலம் உன் பணி சொல்லும்
நினைவை வென்று தரும்
உன் நினைவுடன்
சுமக்கின்றோம் - உன்
பணி.

நண்பன்
ஜீவன்



# Association Tamoule du Valais


## வலே மாநில தமிழ் சங்கம்

### நிஜமாகவிருக்கும் கனவுகள்

ஆதவனின் திசை நோக்கிய சூரியகாந்தி
அறிவினில் தெளிவும் ஆற்றலில் வேகமும் கொண்டவரே
பொறுமையில் பூமித்தாயாகி
பொறுப்பினில் நெருப்பாகி நின்றவரே
எறும்பு போல் வலிமைக்கு மீறிய உழைப்பு
ஒழுக்கமும் பண்பும் ஓங்கிய நிலைப்பு

தன்மானம் என்பது
மண்மானம், இனமானம் என்று
தலைவர் போல் இளமையில்
தமிழீழ விடுதலையில் இணைந்தவரே

தரணிவாழ் தமிழரின் தன்மானம் காத்திடும்
தமிழீழ விடுதலைப் புலிகளின்
தன்னிகரில்லா தளபதியே






பாரெங்கும் உலா வந்த கலை - இன்று
பாவினில் உறைந்த அழகென்ன
யார் அனுபவிக்க விடுதலை?
எனக்குமல்ல எமக்குமல்ல
எம்மினத்தின் நிரந்தர விடிவிற்கே
என்றுரைத்து சென்றீரே
செந்தீயில் குளித்தீரே

ஏதிலித்தமிழர் நாம்
ஏற்றிடுவோம் எம் இதயங்களில்
நிஜமாகவிருக்கும் உங்கள் கனவுகளை.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்



**லெப். கேணல் கலையழகன்**

Tamil Youth Organisation Germany

## வீரவணக்கம்

தமிழழகாய் வாழ்ந்த கலையழகனே!
தமிழ் மக்களின் விடிவுக்காய்,
அண்ணணின் கனவை நினைவாக்குவதற்காய்,
குழந்தைகளின் புன்னகைக்காய்,
தமிழீழ மலர்வுக்காய்,
வெற்றிநோக்கை மனதில் சுமந்தபடி
போர்ப்பாதையில் சென்ற உங்களுக்கு முதலில்
எங்கள் வீரவணக்கத்தைத் தெரிவித்து
வணங்குகின்றோம்!

தொல்லையை ஒழிக்க,
எதிரியை அழிக்க,
வேதனையை நீங்கள் சுமந்து,
வெளிச்சத்தை எமக்குத் தர,
எல்லையை நோக்கிச் சென்று
முல்லை மாவட்டத்தில் விலைமதிக்க முடியாத உயிரை
அர்ப்பணித்தீரே!
நீங்கள் மண்ணில் புதைக்கப்படவில்லை
தமிழர் நெஞ்சில் விதைக்கப்பட்டவர்!
உங்களை என்றும் மனதில் நிறுத்தி வணங்குகின்றோம்!

இளையோர் அமைப்பு
யேர்மனி





help for smile
Chencholae Kantharuban Arevucholae
செஞ்சோலை காந்தரூபன் அறிவுச்சோலை

## வீரவணக்கம்

### லெப். கேணல் கலையழகன்


அனைத்துலகத் தொடர்பகத் துணைப்பொறுப்பாளர்
(சிவபாதசுந்தரம் ஞானசீலன் - யாழ். மாவட்டம்)

தமழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்பகத் துணைப்பொறுப்பாளர் லெப்.கேணல் கலையழகன் 18.04.2007 அன்று வீரச்சாவடைந்தசெய்தியறிந்தோம். எமது தேச விடுதலைப் பயணத்தில் தொடருகின்றவீரச்சாவில் லெப்.கேணல் கலையழ கனும் விடுதலைக்கு வித்தாகியுள்ளார்.

எமது தேசவிடுதலையின் உறவின் பரப்பில் மனித இயல்பு நிலைமைக்கேற்ப லெப். கேணல் கலையழகனின் வீரச்சாவு மனதில் வெதும்பலையும் கண்ணீரையும் வரவழைக்கவே செய்கின்றது.

மனவெதும்பலை ஒரு நிலைப்படுத்தி கண்ணீரை நிறுத்தி அவரின் வீரச்சாவுக்குவீரவணக்கம் செலுத்துகின்றோம்.


செஞ்சோலை
காந்தரூபன் அறிவுச்சோலை
யேர்மனிக்கிளை



தமிழ்க்கல்விச் சேவை சுவிற்சர்லாந்து

Tamil Education Service Switzerland

சிங்களத்தின் இனவெறியைக் கண்டு வெகுண்டெழுந்து, மானிடத்தின் உயர் பெரும் சுதந்திர வேட்கையால் உந்தப்பட்டு, நிகரில்லாத்தலைவர் வழிகாட்டலை ஏற்று நின்று, வீரம், விவேகம், ஒழுக்கம், தமிழ்த் தேசியப்பற்று எனும் பெரும் நற்பண்புகளால் அனைத்துலகத்தொடர்ப கத்தில் துணைப்பொறுப்பாளராக தமிழீழ தேசத்திற்குப் பணி செய்து 18.04.2007 அன்று முல்லை மாவட்டத்தில் எதிர்பாராத வெடிவிபத்தின்போது வீரகாவியமாகிய லெப். கேணல் கலையழகன் அவர்களுக்கு சுவிற்சர்லாந்து தமிழ் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், தமிழ்ப்பாட சாலைப் பொறுப்பாளர்கள், நிர்வாகம் சார்பாக எமது சிரம்தாழ்த்தி வீரவணக்கம் செலுத்துகிறோம்.






# வீரவணக்கம்

நந்திக்கடல் இடுக்கினில் முல்லைத்தரையினில்
அண்ணன் கனவினை கண்களில் தாங்கிநின்றவனே
அனைத்துலக தொடர்பகத்தில் துணைப் பொறுப்பாளர்
பொறுப்பேற்றிருந்த வல்லபுலி லெப். கேணல் கலையழகனே
நீரிலும் நிலத்திலும் நீள்கடல்வான் பரப்பிலும்
வலிமைவளர்க்க தலைவன் இட்டபணி செய்தவனே
கூற்றுவன் நேர்வர அஞ்சியே விபத்தாய் வந்தானோ
புலமும் புலம்பெயர் தமிழரும் பதைத்தோம்
பகைகண்டு பாயும் புலி நீ
தமிழர் துயர்கண்டு உருகும்பனி நீ
அன்று எம் கண்ணெதிர் வந்தவன் நீதான்
இன்று எம் கண்களில் தீயாக நீதான்
ஈழத்தில் விழுதொன்று சாய்ந்தால்
பலநூறு விழுதுகள் வேரெறியும்
ஞாலத்தில் உந்தன் இலட்சியம்
வெல்லும்காலம் விரைவில் வரும்
மானத்துடன் வாழ்ந்து வீரத்துடன் வீழ்ந்த உன்னடி தொழுது
தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
செலுத்துகிறோம் வீரவணக்கம் உந்தனுக்கு எம் சிரம்தாழ்த்தி

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
சூரிச், சித்திரை 2007



# வீரவணக்கம்

## லெப். கேணல் கலையழகன்

(சிவபாதசுந்தரம் ஞானசீலன்)


தமிழ்த் தேசியம் வீறுகொண்டெழுந்த ஓர் நிலை கண்டோம்
தமிழ்த் தாயகத்தில் தேசியத் தலைவன் பிறந்ததினால்

அவன் படையை உலகமும் வியக்கக் கண்டோம்
கலையழகனே உன்போல் மறவர் அங்கு இணைந்ததினால்

உங்கள் போர்வெறியில் ஒரு நெறியைக் கண்டோம்
குலப் பண்பில் நீங்கள் தமிழனாக வளர்ந்ததினால்

புலம்பெயர் தமிழரெங்கும் ஒருங்கிணைந்து வரக்கண்டோம்
ஞானசீலனே உலகத் தொடர்பில் நீ காட்டிய திறமையினால்

சூரியப் புதல்வனே நீ இன்று மறைந்ததாகச் சொல்கிறார்களே
வீரனே சூரியனும் தினமும்தான் மறைகிறதே..
அதன் ஒளி உலகில் மறையுமா...




தமிழர் விளையாட்டுக் கூட்டமைப்பு
யேர்மனி



# வீரவணக்கம்

கலையழகன் என்ற வீரன்
கனதியாய் காரியங்கள் ஆற்றி நின்றான்
காலத்தின் தேவைக்காய் தன்னை
களப் புலியாய் வரித்த வேங்கை
வேளைக்கு வேளை தன் வேலை முடிக்கும் தீ!
நாளைக்கு என்றிராது இன்றே! இப்போதே!...
என்று எம்மோடு தோள் தந்த தோழா!
அனைத்துலகத் தொடர்பகத்தின்
துணைப்பொறுப்பில் எம்மோடு இணைந்தவனே!
இணைத்தாய் உன்னை விடுதலைத் தீயோடு
தமிழீழ விடுதலைக்காய் அர்ப்பணித்தாய் உன்வாழ்வை
உணர்வெலாம் ஈழவிடிவே வாழ்வெனக் கொண்ட நண்பா!
நம்மை விட்டு உன் உடல் பிரியாலாம் - உன்
உணர்வினுள் எரிந்த தீ
எங்கள் மீது தொற்றிக்கொள்கிறது
வீரத்தின் விளைநிலத்தில் காலத்தால்
வீழ்ந்த வித்தே! உன்
கனவுகள் மெய்ப்பட கைகோர்த்து
நாம் நின்று வெற்றிகள் கண்டிடுவோம்!
விடியலில் தமிழீழம் வென்றிடுவோம்!

எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த அனைத்துலகத் தொடர்பகத் துணைப்பொறுப்பாளர் லெப். கேணல் கலையழகனுக்கு யேர்மனிக்கிளையின் வெளியீட்டுப் பிரிவு தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.



புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# வீரவணக்கம்

## லெப். கேணல் கலையழகன்

(சிவபாதசுந்தரம் ஞானசீலன்)

சிந்திய குருதியும் சிதறிய பிணங்களும்
விதைபட்ட விளைநிலம் - தமிழீழத்தை
புதுப்பிக்க புறப்பட்ட புலிவீரனே!
மண்ணின் மைந்தனாய் - எம்மினிய
விடுதலையின் எழுச்சி கொண்ட பெருவீரனாய்!
தாய் மண்ணின் சுதந்திரத்தை மனதிலே சுமந்து
அண்ணனின் வேதத்தை உலகெல்லாம் உரைத்த வீரனே!
மண்ணிலே நீ செய்தபணி களமறியும்
புலத்திலே நீ செய்த பணி புலமறியும்
வெளிநாட்டு கல்வியின் பலன்களை
எமதாக்கி தாய்நாடு மிளிர வேண்டும் என்று
கனவு கண்ட கலையழகே!
நாளை மலரும் தமிழீழத்தின்
வெற்றிக் கொடியேறும் வேளையில்
மரணம் உனை வென்றதோ! புலிவீரனே!
நீ சென்ற தூரம் தொலைவானாலும்
நீ கொண்ட இலட்சியம் வெல்லும் - உனை
அன்னை மண் ஆராதிக்கும் மலர்தூவி

தமிழ்ப் பெண்கள் அமைப்பு
யேர்மனி





# வீரவணக்கம்

## லெப். கேணல் கலையழகன்

(சிவபாதசுந்தரம் ஞானசீலன்)

நந்தவனமதிலே விடுதலைக்காய் மலர்ந்த மலர்
விண்ணோக்கிச் சென்றதுவோ விழிநீரைத் தந்ததுவோ
வந்த செய்தி இன்னும் பொய்யாகிப் போகாதோ
என்று மனம் ஏங்கிறதே என் செய்வோம்

அமைதிப் பேச்சு அடியெடுத்து வைத்தவேளை
அன்னை மண்ணை அரவணைக்க அணியணியாகி வந்தோம்
அன்புடனே அரவணைத்தாய் தமிழீழ நிலை பகர்ந்தாய்
அண்ணன் வழியினிலே புலம் திரள வேண்டுமென்றாய்.

அவலங்கள் சுமந்து அகதிகளாய் அலையும் எங்கள்
நிலை கண்டு நீ துடித்தாய் நேரிலெம்மைத் தேடி வந்தாய்
தாயகத்தின் விடிவொன்றே தமிழினத்தின் விடிவென்றாய்
தமிழீழ மைந்தா புலிவீரா அமைதிகொள்வாய்.

அனைத்துலகத் தமிழினத்தின் அழியா அகல்விளக்கே!
அன்னை மண்ணின் மீட்பிற்காய் ஆகுதியாய்ப் போனவனே!
கந்தகத்தைச் சுமந்து நின்ற கார்த்திகைப் பூவே
கலையழகா தோழா உன் நினைவில் கரைகின்றோம்.

தமிழீழக் கல்விக் கழகம் - ஜேர்மனி
தமிழ் மாணவர்களின் ஒருங்கிணைப்பு நடுவம்

